**செய்தி வெளியீடு எண்: 558** **நாள்: 24.09.2012**

**கலை பண்பாட்டுத்துறை**
**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை – 8**
**தேசிய பாலஸ்ரீ விருதுக்கான சென்னை மாவட்ட அளவிலான போட்டிகள்**

கலைகளில் புதுமை படைத்திடும் குழந்தைகளை ஊக்கப்படுத்திடும் வகையில் ஆண்டுதோறும் **தேசிய இளந்திரு (National Bal Shree Honour)** எனும் தேசிய விருது குடியரசு தலைவரால் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்விருது மேடைக்கலை (Creative Performance), அறிவியற்கலை (Creative Innovative Science), படைப்புக்கலை (Creative Art) மற்றும் எழுத்துக்கலை (Creative Writing) ஆகியவற்றில் புதுமைகள் படைத்திடும் கற்பனை திறமையுடைய 9 லிருந்து 16 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு வழங்கப்படுகிறது. தேசிய இளந்திரு (National Bal Shree) விருது தெரிவு உள்ளூர் அளவில், மண்டல அளவில் மற்றும் தேசிய அளவில் என மூன்று கட்டங்களாக நடைபெறும்.

சென்னை மாவட்டத்தில் உள்ளூர் அளவிலான தெரிவுகள் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் மூலம், சென்னை–4, மயிலாப்பூர், லஸ் அவென்யூவில் உள்ள (நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) செயல்பட்டு வரும் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தில் 03.10.2012 அன்று காலை 9.30 மணி முதல் அறிவியற் கலையிலும் (Creative Innovative Science), 04.10.2012 அன்று காலை 9.30 மணி முதல் படைப்புக் கலையிலும்(Creative Art), 05.10.2012 அன்று காலை 9.30 மணிமுதல் மேடைக் கலையிலும்(Creative Performance), 06.10.2012 அன்று காலை 9.30 மணி முதல் எழுத்துக் கலையிலும் (Creative Writing) போட்டிகள் நடைபெற உள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் 9 வயது 16 வயது வரையிலான மாணவ, மாணவியர்கள் தங்களது பிறப்புச் சான்று (Birth Certificate), மற்றும் பள்ளியில் பயில்வதற்கான சான்றிதழ் (School Bonafide Certificate) சமர்ப்பித்தல் வேண்டும்.

போட்டிக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும், கருவிகளையும் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளே கொண்டு வர வேண்டும். உள்ளூர் அளவிலான இத்தேர்வில் தெரிவு செய்யப்படுவோர், அடுத்து நடைபெறவுள்ள மண்டல அளவிலான தெரிவில் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றச் செலவிலேயே கலந்து கொள்ளலாம்.

இப்போட்டிகள் ஐந்து சுற்றுக்களாக நடைபெறும் முதல் சுற்று போட்டியில் கலந்து கொள்ளும் சிறார்கள் தங்கள் சொந்த கற்பனைத் திறமைகளை தனித் திறமையாக வெளிப்படுத்த வேண்டும். முதல் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட சிறார்கள் அடுத்த நான்கு சுற்றுகளில் கலந்து கொள்ள வேண்டும். சுய அறிமுகம் (Self Introduction), கருத்தை வெளிப்படுத்துதல் (Theme Based), முடிவடையாததை நிறைவு செய்தல் (Completing the incomplete), குழுக்களாக திறமையை வெளிப்படுத்துதல் (Group Based) என்ற வகையில் போட்டிகள் அமைந்திடும்.

மைய அரசால் வழங்கப்படும் தேசிய இளந்திரு விருது ரூ.10,000/– பெறுமானமுள்ள இந்திர விகாஸ் பத்திரம், சான்றிதழ், கேடயம் ஆகியவை அடங்கும். இவ்விருது பெறும் மாணவர்களை தமிழக அரசின் சார்பில் பாராட்டி ரூ.10,000/– வரைவோலையும், சான்றிதழும் வழங்கப்படுகிறது என்பதையும் தகவலுக்காக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண். **2819 2152**

முதன்மைச் செயலாளர் / ஆணையருக்காக

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**